විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත ලේකම් කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுற்றுநிருபம்/2011    දිනය / திகதி / Date 05-05-2011

**ஓய்வூதியச் சுற்றுநிருபம் : 15/2009 (திருத்தம் I)**

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,

மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள்,

**ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளை மீளவும் கடமையில் ஈடுபடுத்துதல் மற்றும் ஓய்வூதியத்தினை மீள்திருத்தம் செய்தல்**

ஓய்வு பெற்ற அரச அதிகாரிகளை மீளவும் கடமையில் ஈடுபடுத்துதல் மற்றும் ஓய்வூதியத்தினை மீள்திருத்தம் செய்தல் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட 21-08-2009 திகதி கொண்ட ஓய்வூதியத் திணைக்களச் சுற்றுநிருபம் 15/2009 ற்கு மேலதிகமானது.

அரச சேவையிலிருந்த அதிகாரியொருவர் ஓய்வுபெற்று, ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்காக வேண்டி அவருக்கு வழங்கப்படும் நியமனக் கடிதத்தில் சம்பள ஏற்றப் பெறுமானங்கள் பெற்றுத் தரப்படுமெனக் குறிப்பிடப்பட்டிருப்பின் மட்டும் சம்பள ஏற்றப் பெறுமானங்களைக் கணிப்பிட்டு ஓய்வூதியத்தினை மீள்திருத்தம் செய்யலாம். எவ்வாறாயினும், நியமனக் கடிதத்தில் சம்பள ஏற்றங்களைப் பெற்றுக் கொடுப்பது பற்றிக் குறிப்பிடப்படாதிருக்கையில் சம்பள ஏற்றப் பெறுமானங்களைக் கணிப்பிடாது ஓய்வூதியத்தினை மீள்திருத்தம் செய்தல் வேண்டும்.

அவ்வாறே ஓய்வூதியத்தினை மீள்திருத்தியமைக்கத் தொடர்ந்தேர்ச்சியாக 02 ஆண்டுகள் கடமை புரிதல் அத்தியாவசியமானது என்பதனையும் தயவுடன் அறியத்தருகிறேன்.

கே.ஏ. திலகரத்ன,
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:
01. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
02. செயலாளர் - நிதி அமைச்சு.
03. கணக்காய்வாளர் நாயகம்.
04. பிரதான கணக்காளர் - ஓய்வூதியத் திணைக்களம்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk